PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.08.12 08:21:48 +0530

# Copy of Deposition

## வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

## அசல் வழக்கு எண்.02/2018

## பிரதிவாதி தரப்பு சாட்சி:1

பெயர்: கார்த்திக் (பி.வா.சா.1 ) நாள்: 12.08.2025

த.பெ:

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.ராமகிருஷ்ணன், அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா1 - குறுக்கு விசாரணை தொடர்ச்சி(வாதி தரப்பு):-**

நான் எதிர் வாதம் தாக்கல் செய்யும்போது ஒரு மாதிரி வரைபடம் தாக்கல் செய்தேனா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் வழக்கறிஞர் ஆணையரை இரண்டு முறை அழைத்து சென்றேன் என்றால் ஒரு முறை தான் அழைத்து சென்றேன். அப்போது நானும் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். முதல்தடவை தாவா இடத்தை பார்வையிட ஒரு கமிஷன் போட்டேன் என்றால் சரிதான். இரண்டாம் முறை தான் நான் அங்கு இருந்தேன். அந்த வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆணையர் அறிக்கை சரியாக உள்ளதா என்றால் சரியாக இல்லை. இதுகுறித்து ஆட்சேபணை எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2வது முறை சர்வேயருடன் சென்று அளந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சரியாக உள்ளதா என்றால் சரியல்ல. நான் எதிர்வாதத்துடன் தாக்கல் செய்திருக்கும் மாதிரி வரைபடம் சரியானதா என்றால் சரியல்ல. தனலட்சுமி வாதிக்கு எழுதிகொடுத்த பத்திரத்தின் படி தடத்தில் வாதிகள் சென்று வருகிறார்கள், வாதிக்கு அவ்வாறு தனலட்சுமி பொதுபாதையை

PANDIARAPAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.12 08:21:53 +0530

எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். சாட்சி மாற்றி தற்போது எழுதிகொடுக்கவில்லை என்று சொல்கிறார். எதிர்வாதத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நிலத்தில் வாதி நுழைய எந்தவிதமான உரிமையும் கிடையாது என்று சொன்னால் அது தவறு என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக பொது வண்டி பாதையில் தான் வாதி சென்றார் என்றால் சரிதான். வாதி தனலட்சுமியிடம் இருந்து வாங்கிய இடத்திற்கு கிழமேல் 15 அடி பொதுதடத்தின் வழியாக தான் வாதி சென்று வருகிறார் என்றால் சரியல்ல. அதில் எனக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. வாதி தனலட்சுமியிடம் இருந்து வாங்கிய இடத்திற்கு கிழமேல் 15 அடி பொதுதடத்தின் வழியாக செல்ல எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைதொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.12 08:21:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.